**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.204/2023**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரீட்டா | க/பெ.: | தம்பிதுரை |
| கிராமம்: | பள்ளங்கோவில் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | இளநிலை உதவியாளர், RTO Office. |
| வயது: | 48 | முகவரி: | பள்ளங்கோவில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.11.2025

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் இந்த விபத்தில் ஏற்பட்ட TN 31 AJ 6798, TN 10 E 2265 மற்றும் TN 04 AJ 9393 ஆகிய வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்த அறிக்கையை தாக்கல் செய்யும்படி அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த விபத்தில் ஈடுபட்ட வாகனங்களின் TN 10 E 2265, TN 04 AJ 9393 ஆகிய இரண்டு வாகனங்கள் மட்டும் மோட்டார் வாகன ஆய்வாளர் பரிசோதனை செய்து அறிக்கை கொடுத்துள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மனுதாரர் தரப்பில் ஏற்கனவே ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN 31 AJ 6798 என்ற

வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் பரிசோதனை செய்யவில்லை என மோட்டார் வாகன ஆய்வாளர் என்னிடம் தெரிவித்தார்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.